


தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) லிட், சார்பில் கொடிசியா மைதானத்தில் 100 புதிய அரசு 'மகளிர் விடியல் பயணம்' பேருந்துகளை போக்குவரத்து துறை மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொடியசைத்து தொடங்கி வைத்தார். இதில் கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன், மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ப.ராஜ்குமார், மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், தலைமை செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்திரன், மாநகராட்சி துணை மேயர் ரா.வெற்றிச்செல்வன், மண்டல் குழுத்தலைவர் கதிர்வேல், கோவை மண்டல தலைவர் சிடிசி பி.துரைசாமி, மண்டல பொதுச் செயலாளர் தொ.மு.ச க.பெரியசாமி, மண்டல பொருளாளர் என்.எ.கணேசன், பீளமேடு பகுதி பொறுப்பாளர் ஏ.எஸ்.நடராஜ், கழக நிர்வாகிகள், அரசு போக்குவரத்து தொ.மு.ச நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## கரூரில் ரூ.56.25 கோடியில் முடிவுற்ற பணிகள் திறப்பு!

# ரூ.162.22 கோடியில் 18,331 பயனாளிகளுக்கு நலத்திட்டங்கள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி சிறப்புரை!

கரூர். ஜூலை.8-

கரூர் திருமாநிலையூர் புதிய பேருந்து நிலைய வளாகத்தில் நாளை நடைபெறும் அரசு விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ரூ.56.25கோடி முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தும், ரூ. 162.22 கோடி மதிப்பீட்டில் 18331 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

கரூர் மாவட்டத்திற்கு வருகை தரும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 9ம் தேதி கரூர் திருமாநிலையூரில் புதிய பேருந்து நிலையத்தை திறந்து வைத்து அரசு விழாவில் பங்கேற்கிறார். ரூ.56.25 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற 13 புதிய திட்ட பணிகளை திறந்து வைத்து, ரூ.162.22 மதிப்பீட்டில் 18,331 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளார்கள், இதுகுறித்து கரூர் மாவட்ட ஆட்சியர் மீ. தங்கவேல் மற்றும் அதிகாரிகளுடன் நடத்திய ஆலோசனைக்குப் பின்னர் கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி செய்தியாளர்களிடம் கூறியதாவது

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கரூர் மாவட்டத்தில் நடைபெறும் அரசு விழாவில் கலந்து கொள்வதையொட்டி நிகழ்ச்சி நடைபெறும் கரூர் திருமாநிலையூர் புதிய பேருந்து நிலையம் வளாகத்தில் விழா முன்னேற்பாடு பணிகளை ஆய்வு செய்யப்பட்டன.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவுப்படி. துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகின்ற 09.07.2025 அன்று கரூரில் நடைபெறும் அரசு விழாவில் கலந்துகொண்டு ரூ.40 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய பேருந்து நிலையம், கரூர் காமராஜர் தினசரி மார்க்கெட். வெங்கமேடு மீன் அங்காடி, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் கட்டப்பட்டுள்ள அறிவியல் பூங்கா உள்ளிட்ட பல்வேறு திட்ட பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்க உள்ளார்கள். அதேபோல் வீட்டுமனை பட்டாக்கள் உள்ளிட்ட பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை 18.331 பயனாளிகளுக்கு ரூ.162.25 கோடி மதிப்பீட்டில் வழங்க உள்ளார்கள். கரூர் மாவட்ட மக்களின் நீண்ட கால கோரிக்கைகளை நிறைவேற்றி வைக்கும் வகையில் துணை முதலமைச்சர் அவர்கள் கரூர் மாவட்டத்திற்கு வருகை தருவது வரலாற்று சிறப்புமிக்க மகிழ்ச்சியான நிகழ்ச்சியாகும்.

மேலும் புதிய பேருந்து நிலையம் திறந்து வைத்த பின்பு முதல் கட்டமாக கோவை மற்றும் சேலம் மார்க்கமாக செல்லும் பேருந்துகள் புதிய பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டு பழைய பேருந்து நிலையம் சென்று அங்கிருந்து தங்களது வழித்தடத்தில் பயணத்தை மேற்கொள்ளும், அதேபோல் திருச்சி மற்றும் திண்டுக்கல் மார்க்கமாக செல்லும் பேருந்துகள் பழைய பேருந்து நிலையத்தி லிருந்து புறப்பட்டு புதிய பேருந்து நிலையம் வந்து பின்னர் தனது வழித்தடத்தில் பயணத்தை மேற்கொள்ளும். மேலும் பழைய பேருந்து நிலையத்திற்கும் புதிய பேருந்து நிலையத்திற்கும் இணைப்பு நகர பேருந்துகள் 24 மணி நேரமும் செயல்படும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது என செந்தில் பாலாஜி தெரிவித்தார்.

முன்னதாக ரூ. 1.69 கோடி மதிப்பீட்டில் கரூர் மாநகராட்சி பள்ளி வளாகம் அருகில் நீச்சல் குளம் அமைக்கும் பணியினை தொடங்கி வைத்து தெரிவித்ததாவது

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவுப்படி, துணை முதலமைச்சர் அவர்கள் உலகளவில் விளையாட்டு துறையினை சிறப்பாக செயல்படுத்தி வருவதன் மூலம் தமிழ்நாடு அரசு விளையாட்டு துறையில் முதன்மைப் பெற்று உள்ளது. நகர மற்றும் கிராம பகுதிகளில் உள்ள இளைஞர்களின் தனித்திறமைகளை கண்டறிந்து அவர்களை ஊக்கப்படுத்தி பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் கரூர் மாவட்டத்திலுள்ள மாணவ மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் கரூர் மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் விளையாட்டு மைதானம் அருகில் 202526ம் நிதியாண்டு கல்வி நிதியாக ரூ. 1.69 கோடி மதிப்பீட்டில் 25 மீட்டர் நீளத்திலும், 17 மீட்டர் அகலத்திலும் 22,535 சதுர அடி அளவில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய நீச்சல் குளம் கட்டும் பணி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இப்பணி 6 மாத காலத்திற்குள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரபட உள்ளது என வி. செந்தில்பாலாஜி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர். இளங்கோ (அரவக்குறிச்சி), க. சிவகாம சுந்தரி (கிருஷ்ணராயபுரம்), கரூர் மாநகராட்சி மேயர். வெ. கவிதா, கரூர் மாவட்ட வருவாய் அலுவலர் ம. கண்ணன், துணை மேயர் ப. சரவணன், மாநகராட்சி ஆணையர் கே.எம். சுதா, மண்டலக்குழு தலைவர்கள் எஸ்.பி. கனகராஜ். ஆர்.எஸ். ராஜா. க. அன்பரசன். எஸ்.சக்திவேல், ஆர். டி.ஓ.முகமதுபைசல் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.



சேலம் மத்திய மாவட்டக் கழக அலுவலகம் "கலைஞர் மாளிகையில் மத்திய மாவட்டக் கழக செயலாளர், சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மற்றும் அமைப்புச்சாரா ஓட்டுநர் அணி மாநில துணைச் செயலாளர் சி.செல்லதுரை ஆகியோர் முன்னிலையில் ஓமலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, ஓமலூர் வடக்கு ஒன்றியம், வெள்ளாளப்பட்டி ஊராட்சி, தேக்கம்பட்டி ஊராட்சி செங்கரடு, வட்டக்காடு, அகராதிபட்டிணம் உள்ளிட்ட ஊராட்சிகளை சார்ந்த அ.தி.மு.க. தமிழக வெற்றிக் கழகம் மற்றும் மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த 130க்கும் மேற்பட்டவர்கள் தங்களை திராவிட முன்னேற்றக்கழகத்தில் இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழக பொருளாளர் வழக்கறிஞர் மு.கார்த்திகேயன், ஓமலூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் திரு.பாலசுப்ரமணியம், ஒன்றிய துணைச் செயலாளர் திருமதி.சரளாதுரை, மாவட்ட பிரதிநிதி சி.ஆறுமுகம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

## விருதுநகர் மாவட்டத்தில் பட்டாசு ஆலையில் விபத்து:

# உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ரூ.4 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூலை 8-

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், வெற்றிலையூரணி கிராமத்திலுள்ள தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியினை முதலமைச்சர்

மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், வெற்றிலையூரணி கிராமத்தில் இயங்கிவரும் தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் 06.07.2025 அன்று காலை சுமார் 8.45 மணியளவில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் சிவகாசி வட்டம், திருத்தங்கல், பனையடிபட்டி தெருவைச் சேர்ந்த பாலகுருசாமி (வயது 50) என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் சிவகாசி வட்டம், தாயில்பட்டி, லட்சுமி நகரைச் சேர்ந்த கண்ணன் (வயது 50) மற்றும் சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை வரும் சாத்தூர் வட்டம், படந்தால், நடுத்தெருவைச் சேர்ந்த ராஜபாண்டி (வயது 37), சிவகாசி வட்டம், தாயில்பட்டி, பசும்பொன் நகரைச் சேர்ந்த ராஜசேகர் (வயது 29), ஜார்க்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த கமலேஷ் ராம் (வயது 28) மற்றும் ரமேஷ் (வயது 20) ஆகிய ஐந்து நபர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில், உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு நான்கு இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவருக்கு ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்து மருத்துவனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# வா.மு.சே வழிநிற்றல் வண்டமிழர் கடன்!



மனம்மொழி ஒன்ற மலர்செயல் பற்றிய
மாண்புடையர்
தனது நலத்தைத் தடுத்தே தனையீன்
தமிழ்மொழியை
இனத்தினை நாட்டினை எண்ணிப்
பணிசெய் பெருங்கவிக்கோ
நினைப்பில் செயலினில் நின்றுமே
ஆற்றல் நிறைபணியே!

குமரி தொடங்கியே கொள்கையும் ஏந்
தியே கோட்டைவரை
தமிழை முழங்கியே தண்டமிழ்க் கோவும்
தமிழ்நிலத்தே
அமிழ்தத் தமிழை அரியணை ஏற்ற
அணிவகுத்தே
இமிழுங் கதிராய் எழுந்தே நடப்பார்
எழுச்சியுற்றே!

கலைஞரைப் போற்றிக் கழகத்தின் ஆட்சி
கலங்கரைபோல்
நிலையாய் நிலத்தினில் நின்றே ஒளிர
நினைத்துமென்றும்
தலையாய்த் தமிழ்ப்பணி தாங்கியே
நின்ற தலைமகனே
நிலைமலை யாகவே நிற்பார் கவிக்கோ
வும் நெஞ்சகத்தே!

பின்னும் கழகத்தின் பீடார்க்கும் ஆட்சி
பிறங்கிடவே
தன்பொன் உழைப்பைத் தளபதி ஆளவும்
தந்தவராம்
என்றுமே சோராப் பெருங்கவிக் கோவே
எழுகதிராய்
தன்னலம் தள்ளித் தமிழ்நலம் பேணுந்
தமிழ்மகனே!

தொண்ணூற்றின் ஒன்றில் தொடரும்
அகவை துலங்குபவர்
பண்தமிழ் காக்கவே பாடாற்றி வந்த
பெருங்கவிக்கோ
கண்ணெனக் கொண்டு களப்பணி
கண்ட கலைமகனின்
தண்ணார் வழியில் தமிழினம் செல்லல்
தகுகடனே!

**புலவர் பழ.தமிழாளன்,**
இயக்குநர்
பைந்தமிழியக்கம்,
திருச்சிராப்பள்ளி.

## தமிழ்நாட்டின் மொழி, இனம், மண் மானம் காத்த தலைவர் திராவிட நாயகர்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பிரமாண்ட வரவேற்பு!

## திருவாரூர் மாவட்டச் செயல்வீரர்கள் கூட்டத்தில் தீர்மானம்!

திருவாரூர், ஜூலை 8 -

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலையை திறந்துவைத்து, பல்வேறு களஆய்வுப்பணிகளை மேற்கொண்டு, நலத்திட்ட உதவிகளை வழங்க திருவாரூர் மாவட்டம் வருகை தரும் தமிழ்நாடு முதல்வர், திராவிட நாயகர் - கழகத் தலைவர் முக.ஸ்டாலின் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிப்பது தொழில் துறை அமைச்சர் டி.ஆர். பி.ராஜா , மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.ஆகியோர் பங்கேற்ற மாவட்ட செயல் வீரர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

திருவாரூர் மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் க.தன்ராஜ் தலைமையில் நடைபெற்றது. தொழில் துறை அமைச்சர் டி.ஆர். பி.ராஜா , மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர். மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, தொகுதி பொறுப்பாளர்கள் எஸ். கே.வேதரத்தினம், ஜெகவீரபாண்டியன், ராஜா சீனிவாசன் ,சௌமியன் வைத்யநாதன் மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ். கார்த்திக், எம்.ராம கிருஷ்ணன், சாந்தி பாஸ்கர், பொருளாளர் மு.வெங்கடேசன் உள்ளிட்டோர் முன்னிலை ஏற்றனர்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானம்.

இந்திய துணைக்கண்டம் மட்டுமல்லாமல், உலக நாடுகளே வியந்து பாராட்டும் உன்னத ஆட்சி நடத்தும் தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் , திராவிட இயக்கம் எதற்காக தோற்றுவிக்கப்பட்டதோ அந்த நோக்கங்களிருந்து எள்ளளவும் மாறாமல் இந்த இயக்கத்தை வழிநடத்துவதோடு, எத்தனை எதிர்ப்புகள் இடையூறுகள் ,எந்த வடிவில் வந்தாலும் தமிழ்நாட்டின் மொழி, இனம், மண் மானம் காத்து மக்கள் மனதில் நிரந்தரமாக நிறைந்து இருக்கிறார்.

"ஒன்றிணையும் தமிழ்நாடு" இயக்கத்தின் வழியாக இந்தியாவையே ஒன்றிணைக்கும் உன்னத தலைவராக விளங்கும் தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நமது திருவாரூர் மாவட்டத்திற்கு வளர்சித் திட்டபணிகளின் களஆய்வுகளுக்காகவும், நமது மாவட்டக்கழக்கம் சார்பில் நிருப்படவிருக்கும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலை திறப்பு விழாவிற்கும், பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குவதற்காகவும் வருகைதர உள்ளார் கள்.

திருவாரூர் மாவட்டம் வருகைதரும் மாண்புமிகு முதல்வர், கழகத்தலைவர் அவர்களுக்கு மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள்,வார்டு கிளைக் கழகங்களின் நிர்வாகிகள், கழக தோழர்கள், பொதுமக்கள் என அனைத்து தரப்பினரும் பெருந்திரளாக பங்கேற்று, நாடு போற்றும் அந்த மகத்தான தலைவருக்கு நமது மாவட்ட மக்களின் சார்பில் பிரமாண்ட வரவேற்பளிப்பது என தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.




கரூர் மாவட்டச் செயற்குழு கூட்டம் மாவட்ட அலுவலகம் கலைஞர் அறிவாலயம், தளபதி அரங்கில் அவைத்தலைவர் டி.ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி சிறப்புரையாற்றினார்.



தருமபுரி கிழக்கு மாவட்டம், நல்லம்பள்ளி மேற்கு ஒன்றியம் இண்டூர் ஊராட்சியில் தருமபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி எம்.பி.தலைமையில்,நல்லம்பள்ளி மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் என்.பி.பெரியண்ணன் முன்னிலையில் 'ஓரணியில் தமிழ்நாடு' முன்னேடுப்பின் மூலம் கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி வீடு வீடாகச் சென்று உறுப்பினர் சேர்க்கை நடைபெற்றது. உடன் தகவல் தொழில்நுட்ப அணியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எம்.பி. கௌதம்,இளங்கவி, சிம்பு,மணி, முருகன், தருமன், BLA2 அப்சல்,BDA பிரசாந்த் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.